வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu


Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 17.04.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 101 பக்கங்கள் : 08



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# ஒரு சில சர்வாதிகாரிகளால் சீரழிக்கப்படுகிறது உலகம்!

## திருத்தந்தை லியோ கடும் விமர்சனம்



யவுண்டி, ஏப். 17

உலக நாடுகள் போருக்காக பில்லியன் கணக்கான டொலர்களைச் செலவிடுவதைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை 14 ஆம் லியோ, உலகம் தற்போது ஒரு சில சர்வாதிகாரிகளால் சீரழிக்கப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

கமரூன் குடியரசுக்கான பயணத்தின் போது அவர் இந்த விமர்சனத்தை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் சமூக வலைத்தளங்களில் திருத்தந்தையைத் தொடர்ந்து விமர்சித்து வரும் நிலையில், அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் திருத்தந்தையின் இந்த உரை அமைந்துள்ளதாகக் கருதப்படுகிறது.

அழிவுக்காகவும் கொலைகளுக்காகவும் பில்லியன் கணக்கான டொலர்களைச் செலவிடும் உலகத் தலைவர்கள், மக்களின் கல்வி, மருத்துவம் மற்றும் மறுசீரமைப்புக்கான நிதியை வழங்கத்

07

# முறிகண்டிப் பகுதியில் ரயிலுடன் மோதிய கார்!

## தம்பதியர் காயம்

கிளிநொச்சி, ஏப். 17

கிளிநொச்சி, முறிகண்டிப் பகுதியில் இன்று வியாழக்கிழமை ரயிலுடன் கார் மோதி இடம்பெற்ற விபத்தில் தம்பதியர் காயமடைந்தனர்.

ரயில் கடவையை கடக்க முயன்ற கார் ஒன்று, ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில், காரில்

07



## மசகு எண்ணெய் ஏற்றிய கப்பல் இன்று வருகிறது

கொழும்பு, ஏப். 17

மத்திய கிழக்கில் இருந்து 9 ஆயிரத்து 750 மெற்றிக் தொன் மசகு எண்ணெய்யை ஏற்றிய கப்பல் இன்று நாட்டை வந்தடையவுள்ளதாக இலங்கை

07

## வவுனியா, யாழில் நேற்று அதிகபட்ச வெப்பநிலை!

கொழும்பு, ஏப். 17

அதிகபட்ச வெப்பநிலையான 36.1 பாகை செல்சியஸ் வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் நேற்று பதிவாகியுள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நாட்டின் 21 மாவட்டங்களில் இன்று மனித உடலால் உணரப்படும் வெப்பத்தின் அளவு "எச்சரிக்கை மட்டம்" வரை அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

07

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை அவசியம்

## தமிழக வெற்றிக் கழகம் வலியுறுத்து



சென்னை, ஏப். 17

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமையை வழங்க தமிழக வெற்றிக் கழகம் சார்பில் ஒன்றிய அரசிடம் வலியுறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக வெற்றிக் கழகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் இந்த விடயம்

07

## நெடுந்தீவு கலப்பு மின்சார உற்பத்தித் திட்டம் ஆளுநர், இளங்குமரன் எம்.பி. நேரில் பார்வை

யாழ்ப்பாணம், ஏப். 17

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் நேற்று வியாழக்கிழமை நெடுந்தீவுப் பிரதேச மருத்துவமனை மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் கலப்பு மின் உற்பத்தித் திட்டம் ஆகியவற்றை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வுகளை முன்னெடுத்தனர்.

நெடுந்தீவில் அமைக்கப்பட்டு வரும் கலப்பு மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் ஆரம்பக் கட்டமாக, சூரிய சக்தியூடான மின் உற்பத்திப் பணிகள் விரைவில் நிறைவு செய்யப்பட்டு, மக்களுக்கான மின் விநியோகம் ஆரம்பிக்கப் படும் என இதன் போது

07

## மகிந்த மீதான அவதூறு பரப்புரை; சி.ஐ.டி.யில் மொட்டு முறைப்பாடு

கொழும்பு, ஏப். 17

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவுக்குச் சொந்தமான எட்டு வங்கிக் கணக்குகளில் 930 பில்லியன் ரூபாய் பணம் இருப்பதாகத் தெரிவித்து, சமூக வலைத்தளங்களில் திட்டமிட்ட முறையில் அவதூறுப் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுவதாகக் கூறி பொதுஜன பெரமுனவின் இளைஞர் முன்னணியினர் நேற்று காலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றை அளித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் சமூக வலைத்தளக் கணக்குகளின் ஊடாக இவ்வாறான போலிச்

07

## வவுனியாவில் முதியவரின் சடலம் மீட்பு!

வவுனியா, ஏப். 17

வவுனியா கொறவப்பொத்தானை வீதியில் பெரிய பள்ளிவாசலுக்கு அருகில் இருந்து சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டது.

குறித்த பகுதியில் சடலம் ஒன்று

07

## ஆற்றில் திடீரென அதிகரித்தது நீர் தந்தை, மகன் உட்பட மூவர் மரணம்!

### மேலும் சிலரை காணவில்லை

கொழும்பு, ஏப். 17

தெதுறு ஓயாவில் மூழ்கி தந்தை மகன் உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ள நிலையில் மேலும் சிலர் காணாமல் போயுள்ளனர்.

தெதுறு ஓயாவில் சுமார் 10 பேர் கொண்ட குழு ஒன்று நேற்று நீராடிக்கொண்டிருந்த வேளை, திடீரென நீர் வரத்து அதிகரித்ததை அடுத்து நீராடிக்கொண்டிருந்தவர்கள் நீரில் அடித்துச்

07

## ஆட்பதிவுத் திணைக்களத்தின் சேவை இன்று இடைநிறுத்தம்!

கொழும்பு, ஏப். 17

கணினி கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப சிக்கல் காரணமாக இன்று வெள்ளிக்கிழமை பொதுமக்களுக்கான எந்தவித சேவைகளும் முன்னெடுக்கப்படமாட்டாது என ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு பத்தரமுல்லையில் உள்ள தலைமை அலுவலகம் மற்றும் நாடளாவிய ரீதி யிலுள்ள ஏனைய பிராந்திய அலுவலகங்களிலும் இன்று பொதுமக்களுக்கான சேவைகள்

07

## கட்டைக்காடு பகுதியில் 4 வீடுகள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 17

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டு பகுதியில் ஒரே நேரத்தில் நான்கு வீடுகள் மீது நேற்று முன் தினம் இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்த நபர் ஒருவர் அங்கு உடைமைகள், கண்ணாடி, தளபாடங்களை அடித்துச் சேதப்படுத்தி உள்ளார்.

குறித்த நபர் அப்பகுதியில் பல நாள்களாக குடும்பங்களை அச்சுறுத்தி வருவதாகவும் அருகில் வசிக்கும் குடும்பங்களுக்கு பாதுகாப்பில்லாத

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# தங்காலையில் கைத்துப்பாக்கியுடன் கடற்படை முன்னாள் சிப்பாய் கைது!

கொழும்பு, ஏப். 17

அம்பாந்தோட்டை, தங்காலைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கைத்துப்பாக்கி ஒன்றை உடைமையில் வைத்திருந்த கடற்படையின் முன்னாள் சிப்பாய் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தங்காலைப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நபர் ஒருவர் நடமாடுகின்றார் என்று பொலிஸ் விசேட பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போதே அவர் சிக்கியுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் கடற்படையின் முன்னாள் சிப்பாய் என்பது முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அவர் எதற்காக இந்த ஆயுதத்தை வைத்திருந்தார்? ஏதேனும் குற்றச் செயல்களில் ஈடுபடத் திட்டமிட்டிருந்தாரா? அல்லது பாதாள உலகக் குழுக்களுடன் இவருக்குத் தொடர்பு உள்ளதா? என்பது குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சமாதானத்துக்கான நடைபயணம் அநுராதபுரத்தில் ஏப். 21 ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 17

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட "சமாதானத்துக்கான நடைபயணம்" யாத்திரை, இலங்கையில் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த யாத்திரையை வண. பன்னாகார தேரர் தலைமையில் 12 பௌத்த தேரர்கள் அடங்கிய குழுவினர் வழிநடத்தவுள்ளனர்.

ஒரு வாரம் நடைபெறவுள்ள இந்த ஆன்மீக நடைபயணம் அநுராதபுரத்தில் ஆரம்பமாகி கொழும்பில் நிறைவடையவுள்ளது.

சமாதானம் மற்றும் ஒற்றுமையை வலியுறுத்தும் நோக்கில் புனித ஜய மகா போதியின் ஒரு கிளையையும், புனித சின்னங்களையும் இந்த யாத்திரையின்போது பௌத்த தேரர்கள் தாங்கிச்செல்வர்.

அரசாங்கத்தின் "க்ளீன் சிறீலங்கா" வேலைத்திட்டத்தின் ஆதரவுடன் இந்த நடைபயணம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)

# 21 மாவட்டங்களில் கடும் வெப்பநிலை

கொழும்பு, ஏப். 17

இலங்கைக்கு நேராகச் சூரியன் உச்சம் கொடுப்பதன் காரணமாக, நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வெப்பநிலையானது மனித உடலால் உணரப்படும் அளவை விட அதிகரித்து காணப்படும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் விடுக்கப்பட்டுள்ள இந்த எச்சரிக்கையின்படி, பின்வரும் பகுதிகளில் வெப்பம் கடுமையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது:

வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மேற்கு, சபரகமுவ, தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள், மொனராகலை உட்பட மொத்தம் 21 மாவட்டங்களில் உள்ள சில இடங்களில் வெப்பக் குறியீடு "எச்சரிக்கை" மட்டம் வரை உயரக்கூடும்.

வெப்பம் அதிகரிப்பதன் காரணமாகப் பொதுமக்கள் பின்வரும் உடல்நலச் சிக்கல்களைச் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

நீண்ட நேரம் வெயிலில் இருப்பதாலும், வேலை செய்வதாலும் உடல் அதிக சோர்வடையும்.

தொடர்ச்சியான கடின உழைப்பு அல்லது உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது வெப்பத்தினால் ஏற்படும் தசைப்பிடிப்புகளுக்கு வழிவகுக்கும்.

வெப்பத்தின் தாக்கத்திலிருந்து தற்காத்துக்கொள்ள, போதிய அளவு தண்ணீர் பருகவேண்டும். முடிந்தவரை நிழலான இடங்களில் தங்கியிருக்க வேண்டும். முதியவர்கள் மற்றும் சிறுவர்கள் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும்.வெளிர் நிறத்திலான பருத்தி ஆடைகளை அணிய வேண்டும் என வானிலை ஆய்வு மையம் மற்றும் சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர். (அ)

# 100 பாடசாலை மைதானங்களை மேம்படுத்த அரசு நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 17

நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில், தெரிவு செய்யப்பட்ட 100 பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களை நவீன தரத்திற்கு மேம்படுத்தக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்புக்கு வெளியேயுள்ள பாடசாலைகளில் நிலவும் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகக் கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ஒரு தேசிய பாடசாலை மற்றும் மூன்று மாகாண பாடசாலைகள் என மொத்தம் 100 பாடசாலைகள் இந்தத் திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்படவுள்ளன.

இந்த மைதானங்களில் சர்வதேச தரத்திலான 400 மீற்றர் ஓடு தளங்கள் அமைக்கப்படவுள்ளதுடன், விளையாட்டு அமைச்சின் ஒத்துழைப்புடன் அவசியமான ஏனைய உட்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

மாணவர்களின் விளையாட்டுத் திறன்களை மேம்படுத்தவும், மாவட்ட ரீதியாகச் சிறந்த வீரர்களை உருவாக்கவும் இந்தத் திட்டம் பாரிய பங்களிப்பை வழங்கும் எனப் பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# எரிவாயு விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 17

சித்திரை புத்தாண்டு விடுமுறையை முன்னிட்டு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த உள்நாட்டு எரிவாயு விநியோக நடவடிக்கைகள் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்படி, அம்பாந்தோட்டை மற்றும் மாபிம முனையங்கள் ஊடாக நேற்று முதல் 5,000 மெற்றிக் தொன் எரிவாயுவை சந்தைக்கு விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக லாப்காஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை, லிட்ரோ நிறுவனமும் தனது விநியோக நடவடிக்கைகளை நேற்று முதல் வழமைக்குக் கொண்டு வந்துள்ளது. எதிர்வரும் மே மாதம் வரை விநியோகிப்பதற்குத் தேவையான போதியளவு எரிவாயு கையிருப்பில் உள்ளதாகவும், நுகர்வோர் எவ்வித தட்டுப்பாடும் இன்றி எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அந்த நிறுவனம் உறுதியளித்துள்ளது. (அ)

# 5 நாள்களில் அதிவேக வீதிகள் ஊடாக 22 கோடி ரூபாவுக்கும் அதிக வருமானம்

கொழும்பு, ஏப். 17

சித்திரை புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, கடந்த ஐந்து நாள்களில் மாத்திரம் நாட்டின் அதிவேக நெடுஞ்சாலைகள் ஊடாக 22 கோடி ரூபாய்க்கும் அதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இம்மாதம் 10 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையிலான காலப்பகுதியில், சரியாக 22 கோடியே 92 இலட்சத்து 42 ஆயிரத்து 40 ரூபாய் வருமானமாகக் கிடைத்துள்ளது.

இந்த ஐந்து தினங்களில் மாத்திரம் 6 இலட்சத்து 10 ஆயிரத்து 325 வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தியுள்ளன.

இதில் கடந்த 10 ஆம் திகதி ஒரே நாளில் மாத்திரம் சுமார் 5 கோடியே 98 இலட்சம் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மக்கள் தங்களது சொந்த ஊர்களுக்குப் பயணித்தமையே இந்த வருமான அதிகரிப்பிற்குக் காரணம் என வீதி அபிவிருத்தி அதிகார சபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# வாகனங்களுக்கு மாற்று இலக்கத் தகடுகள் பயன்படுத்தும் சாரதிகள் மீது நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 17

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தரப்படுத்தப்பட்ட இலக்கத் தகடுகளுக்குப் பதிலாக, மாற்றியமைக்கப்பட்ட அல்லது சட்டவிரோத இலக்கத் தகடுகளைப் பயன்படுத்தும் வாகனச் சாரதிகளுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. புதிதாகப் பதிவு செய்யப்படும் வாகனங்களுக்கு இலக்கத் தகடுகளை வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தைப் பயன்படுத்தி, சில தரப்பினர் இவ்வாறான சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வருவதாகப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படாத வெவ்வேறு நிறங்கள் மற்றும் வடிவங்களிலான இலக்கத் தகடுகளைப் பயன்படுத்துவது பாரிய குற்றமாகக் கருதப்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

இவ்வாறான சட்டவிரோத இலக்கத் தகடுகள் மூலம் குற்றச் செயல்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், இதனைத் தடுப்பதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்குப் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.




விண்ணக வாழ்வில் ஆண்டுகள் முப்பத்திநான்கு



அமரர் செபமாலைமுத்து பீற்றர் திசநாயகம்
மலர்வு 29.06.1951 உதிர்வு 17.04.1992

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்"

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்
எம்மை வழிநடத்தி இன்பத்திலும் துன்பத்திலும்
இன்முகத்துடன் அனைவரையும் அன்பு செய்து
பழகியோர் மனங்களில் மாண்புமிக்கவராய் வாழ்ந்தீரே
மனுமகன் மரித்த நாளில் மண்ணுலக
வாழ்வுக்கு விடை கொடுத்தீரே
காலவோட்டத்தில் 34 ஆண்டுகள்
கழிந்திடினும் நின் நினைவுகள் என்றும் வாழும்

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக
பிரார்த்திக்கும் மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனி,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
17.04.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 04

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தமிழ்நாடு சட்டசபை தேர்தல் களத்தில் எம்.ஜி.ஆர்…!

தமிழ்நாட்டில் சினிமா நடிகர்கள் அரசியலில் இறங்கினால் அவர்கள் மக்கள் செல்வாக்கை பெறுவதற்கு இருக்கக் கூடிய வாய்ப்புக்களை எம்.ஜி. ஆரின் வெற்றிகரமான அரசியல் வாழ்வுடன் ஒப்பிடுவது நிலை பெற்றுவிட்ட ஒரு அளவுகோல்.

எம்.ஜி. ஆர். சினிமாவில் புகழின் உச்சிக்குச் சென்ற பின்னர்தான் அரசியலுக்கு வந்தவரல்ல. அவரது அரசியல் வாழ்வும் சினிமாவில் வளர்ச்சியும் ஏறத்தாழ சமாந்தரமானவை. இரு வருடங்களுக்கு முன்னர் தமிழக வெற்றிக் கழகம் என்ற அரசியல் கட்சியை தொடங்கி சட்டசபை தேர்தலில் போட்டியிடும் நடிகர் விஜய் சினிமாவில் உச்சத்தை எட்டிய பின்னர்தான் அரசியலிலுக்கு வந்தார்.

தற்போது அனல் பறக்கும் தேர்தல் பிரசாரங்களில் விஜய்க்கு எதிராக தாக்குதல்களைத் தொடுக்கும் மற்றைய கட்சிகள் எம்.ஜி. ஆரை தாராளமாகப் பயன்படுத்துகிறார்கள். அதாவது விஜய் ஒரு எம்.ஜி.ஆர். அல்லர். அவருடன் இவரை அறவே ஒப்பிடமுடியாது என்று பேசுகிறார்கள். இவரை எம்.ஜி. ஆரைப் போன்றவர் என்று நம்பி மக்கள் வாக்களித்து விடுவார்கள் என்ற பயம் அவர்களுக்கு.

எம்.ஜி.ஆர். மறைந்து சுமார் 40 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், அவரது பெயரைச் சொல்லாமல் தமிழ் நாட்டில் அரசியல் செய்யமுடிவதில்லை என்ற ஒரு நிலை இருக்கிறது என்பது உண்மை. அவர் தனது காலத்தில் தமிழ்ச் சினிமாவில் முடிசூடா மன்னாக விளங்கி மக்கள் செல்வாக்கின் உச்சத்தில் இருந்தார் என்பதற்கு அப்பால் தேர்தல் அரசியலில் அவரது பெயரைக் கட்சிகள் தவறாமல் குறிப்பிடுவதற்கு மூன்று முக்கிய காரணங்கள்.

அவர் மக்களுக்கு வாரிக்கொடுக்கும் வள்ளலாக விளங்கினார் தனது ஆட்சிக் காலத்தில் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தப் பாடுபட்டார் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எதிரான பரந்த ஒரு அரசியல் களத்தை உருவாக்கி வைத்திருந்தார்.

தி.மு.க. வை தனது அரசியல் எதிரி என்று கூறும் விஜய் இந்த காரணங்களுக்காக தேர்தல் பிரசாரங்களில் எம்.ஜி.ஆரின் பெயரையும் அவரின் நல்வாழ்வுத் திட்டங்களையும்

குறிப்பிட நிர்ப்பந்திக்கப்படுகிறார். அவர் மாத்திரமல்ல. தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்ராலினும் கூட அடிக்கடி எம்.ஜி. ஆருடன் தனக்கிருந்த நெருக்கத்தை நினைவுபடுத்துவதுடன் “பெரியப்பா” என்றும் அவரை அழைக்கிறார்.

மலேசியாவுக்கு சென்றிருந்தபோது தனக்கு பிரதமர் அன்வர் இப்ராஹிம் அளித்த மதிய விருந்தின்போது இசைக்கப்பட்ட பாடல்களில் ஒன்று எம்.ஜி. ஆரின் “நாளை நமதே” பாடல் என்றும் இப்ராஹிமும் இந்தியாவில் உள்ள எங்களில் பலரைப் போன்று எம். ஜி. ஆரின் பெரிய இரசிகர் என்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் “எக்ஸ்” சமூக ஊடகத்தில் பதிவு செய்திருந்தார்.

எம்.ஜி.ஆர். தாபித்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி அமைத்து சட்டசபை தேர்தல் களத்தில் பாரதிய ஜனதா நிற்கவில்லை என்றால் மோடி எம்..ஜி. ஆர். பற்றி இவ்வாறு ஒரு பதிவைச் செய்திருப்பாரா?

அண்மைய தசாப்தங்களில் தமிழ் நாட்டில் அரசியலில் பிரவேசித்த நடிகர்களுடன் ஒப்பிடும் போது விஜய் பெருமளவில் மக்கள் செல்வாக்கைக் கொண்டிருக்கிறார் என்பதை அவரது தேர்தல் பிரசாரப் பேரணிகள் நிரூபிக்கின்றன. ஆனால், எம்.ஜி.ஆரின் பெயரைக் கூறுவதன் மூலம் அண்ணா தி.மு.க. வின் வாக்குகளை எந்தளவுக்கு விஜயினால் கவரக் கூடியதாக இருக்கும் அல்லது நீண்டகால நோக்கில் வலுவான ஒரு ஆதரவுத் தளத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்று தெரியவில்லை.

எது எவ்வாறிருந்தாலும், கடந்துபோன ஒரு யுகத்தின் சினிமா ஆளுமையும் அரசியல் தலைவருமான. எம்.ஜி. ஆரின் மரபை மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக நினைவூட்டாமல் இருக்க அவரது கட்சிக்கு எதிரான அரசியல் வாதிகளினால் கூட முடியவில்லை என்பது பெரிய புதிர்.

# ஹோர்முஸ் நீரிணையில் ஈரான் கப்பலை தடுத்து நிறுத்திய அமெரிக்க போர்க்கப்பல்



தெஹ்ரான், ஏப். 17

ஹோர்முஸ் நீரிணை வழியாக வெளியேற முயன்ற மற்றுமொரு ஈரானிய சரக்குக் கப்பலை அமெரிக்க கடற்படையின் தாக்குதல் கப்பல் வெற்றிகரமாக தடுத்து திருப்பி அனுப்பியுள்ளது.

ஈரானியக் கொடியுடன் பயணித்த இந்தச் சரக்குக் கப்பலைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையில் “USS Spruance (DDG-111)” என்ற அமெரிக்கப் போர்க் கப்பல் ஈடுபட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தக் கப்பலுடன் சேர்த்து, ஈரானில் இருந்து புறப்பட்ட சுமார் 10 கப்பல்கள் இதுவரை அமெரிக்காவினால் திருப்பியனுப்பப்பட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பினால் ஹோர்முஸ் நீரிணை ஊடாக விதிக்கப்பட்ட கடற்படைத் தடைகள் அமுலாகி நேற்றுடன் மூன்று நாட்கள் நிறைவடைந்தன.

உலகளாவிய எண்ணெய் விநியோகத்தில் சுமார் 20 சதவீதத்தைக் கொண்டுள்ள ஹோர்முஸ் நீரிணை ஊடான போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி, ஈரான் மீது அழுத்தத்தை ஏற்படுத்துவதே இந்தத் தடையின் நோக்கமாகும்.

இந்த நடவடிக்கையில் 10,000இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர், 12இற்கும் மேற்பட்ட போர்க்கப்பல்கள் மற்றும் பல விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், ஈரானுடன் தொடர்பில்லாத ஏனைய நாடுகளின் கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணை ஊடாகப் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (எ)

# ஈரான் மீதான போருக்கு அமெரிக்க செனட் சபை ஆதரவு

வாஷிங்டன், ஏப். 17

ஈரான் மீதான ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் இராணுவ நடவடிக்கைகளை தடுப்பதற்காக ஜனநாயக கட்சியினரால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் அமெரிக்க செனட் சபையில் தோல்வியடைந்தது.

ஈரானுக்கு எதிரான போரை நிறுத்தக் கோரி கொண்டுவரப்பட்ட இந்த “போர் அதிகாரத் தீர்மானம்” 52-47 என்ற வாக்கு வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது.

இதன் மூலம், ஈரான் மற்றும் இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது வான்வழித் தாக்குதல்களைத் தொடங்கி ஆறு வாரங்கள் கடந்த நிலையிலும், ஜனாதிபதி ட்ரம்ப்புக்கு அவரது குடியரசுக் கட்சிக்குள் பலமான ஆதரவு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் ராண்ட் போல் மட்டுமே கட்சி மாறி இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தார்.


ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் ஜோன் பெட்டர்மேன் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த ஒரே ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஆவார்.

சமீபத்திய ரொய்ட்டர்ஸ் கருத்துக்கணிப்பின்படி, 60 வீத அமெரிக்கர்கள் ஈரான் மீதான இராணுவத் தாக்குதலை எதிர்க்கின்றனர்.

இருப்பினும், குடியரசுக் கட்சியினரில் 74 வீதமானோர் அதற்கு ஆதரவளிப்பதாகவும், ஜனநாயகக் கட்சியினரில் 7 வீதமானோர் மட்டுமே ஆதரிப்பதாகவும் தெரியவந்துள்ளது. (எ)

# எங்களை சரணடைய வைப்பதற்கு முயல்வது தோல்வியையே தரும்

## ஈரான் ஜனாதிபதி உறுதி



தெஹ்ரான், ஏப். 17

மேற்கு ஆசியாவில் பதற்றம் நீடிக்கும் நிலையில், ஈரான் அரசு மீது பலத்தைப் பிரயோகிக்கும் எந்தவொரு முயற்சியும் இறுதியில் தோல்வியடையும் என்று அந்த நாட்டின் ஜனாதிபதி மசூத் பெசஷ்கியான் திட்டவட்டமாக கூறியுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து, அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை விரைவில் நடைபெற வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதே நேரத்தில், கடந்த இரு நாட்களாக ஹோர்முஸ் நீரிணையை அமெரிக்கப் படைகள் முற்றுகையிட்டு வருகின்றன.

இந்தச் சூழலில் ஈரான் அரசு ஊடகமான ஐ.எஸ்.என்.ஏவில் ஈரான் ஜனாதிபதி மசூத் பெசஷ்கியான் வெளியிட்ட அறிக்கையில்,

நாங்கள் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையை வலியுறுத்துகிறோம். ஆனால், சரணடைய நிர்ப்பந்திப்பதை ஏற்க மாட்டோம். ஈரானை சரணடைய வைக்கவோ அல்லது ஈரான் மீது பலத்தை திணிக்கும் எந்தவொரு முயற்சியும் தோல்வியடையும். மக்களும் அத்தகைய அணுகுமுறையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஈரான் ஒருபோதும் போரை நாடவில்லை

எங்கள் நாட்டின் மீதான தாக்குதல் எந்த அதிகாரத்தின் பேரில், எந்தக் காரணத்துக்காக நடத்தப்பட்டது? சர்வதேச சட்டம் மற்றும் மனிதாபிமானக் கொள்கைகளின் அடிப்படையில் பொது மக்கள், குழந்தைகள் ஆகியோரைக் குறிவைத்து தாக்கவும், பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகள் உள்ளிட்ட முக்கிய மையங்களை அழிப்பதற்கும் என்ன நியாயம் இருக்கிறது? என்றும் அவர் கேள்வியெழுப்பினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | |
|---|---|---|
| ஏப்ரல் - 17 வெள்ளிக்கிழமை | | |
| விசுவாவசு வருடம் - | சித்திரை 04 | |
| நல்ல நேரம் | : | 09.00 - 10.30 |
| ராகு காலம் | : | 10.30 - 12.00 |
| திதி | : | அமாவாசை |



## இன்றைய ராசிபலன்

**மேடம்** கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். உத்தியோகத்தில் மோதல்கள் வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவை.

**இடபம்** குடும்பத்தில் உள்ளவர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். உத்தி யோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**மிதுனம்** நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். சாதிக்கும் நாள்.

**கடகம்** கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியரகள் ஒத்துழைப்பார்கள். புதிய மாற்றம் ஏற்படும்.

**சிம்மம்** சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். மறைமுக விமர்சனங்கள் வந்து போகும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**கன்னி** எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**துலாம்** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**விருச்சிகம்** புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**தனுசு** கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**மகரம்** குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்** கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**மீனம்** ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

# நெடுந்தீவு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு தீர்வு வேண்டும்

## கவனவீர்ப்பு போராட்டத்துக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 17

நெடுந்தீவு மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் பிரச்னைகளை முன்னிறுத்தி 'கவனவீர்ப்பு போராட்டத்துக்கு' அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கவனவீர்ப்பு போராட்ட ஏற்பாட்டு குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நெடுந்தீவில் சராசரியாக 1418 குடும்பங்கள் உள்ளன. அவற்றில், இதுவரை காலமும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் கடல் நீர் சுத்திகரிக்கப்பட்டு 688 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. தற்போது 200 குடும்பங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரும், மீதமுள்ள 488 குடும்பங்களுக்கு நெடுந்தீவு மேற்கு சாராப்பிட்டியில் இருந்து நீர் வழங்கப்படுகின்ற போதும், அந்த நீர் பயன்படுத்த முடியாத நிலையில் உவர்த்தன்மை கொண்டதாக காணப்படுகின்றது. இதை விட மீதமுள்ள 730 குடும்பங்களின் வீடுகளுக்கு நீர் இணைப்பு இல்லாத நிலையில், அவர்களும் சாராப்பிட்டி நீரையே நம்பியிருக்கின்றனர்.

நெடுந்தீவின் கடல் போக்குவரத்துக்கு பொறுப்புக் கூற வேண்டிய பாரிய கடப்பாடு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உள்ளது. குமுதினி, வடதாரகை, நெடுந்தாரகை ஆகிய மூன்று கடற்கலன்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரியதாகும். அதில் வடதாரகை திருத்த வேலைக்காக கொண்டு செல்லப்பட்ட நிலையில், நெடுந்தாரகை பழுதடைவது மீண்டும் ஓடுவது என நிச்சயமற்ற நிலையில் உள்ளது.

50 வருடங்களுக்கு மேலாக சேவையில் ஈடுபட்ட குமுதினி கடந்த மூன்று மாதங்களாக பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது.- இவ்வாறான பல பிரச்னைகளை சுட்டிக்காட்டியே எதிர்வரும் 24 ஆம் திகதி போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# ஒரு கோடியே 13 இலட்சம் பெறுமதியான சீன சிகரெட்களுடன் 6 சீனர்கள் கைது!

கொழும்பு, ஏப். 17

நாட்டுக்குள் சட்டவிரோதமாக கொண்டு வந்த சீனத் தயாரிப்பு சிகரெட்களுடன் ஆறு சீனப் பிரஜைகள் நேற்று வியாழக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

சுங்க அதிகாரிகள் மற்றும் சுங்கப் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சீனப் பிரஜைகள் அனைவரும் வர்த்தகர்கள் என்று தெரியவருகிறது.

சந்தேகநபர்கள் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.




இவர்கள் கொண்டு வந்த பயணப் பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சீனாவில் உற்பத்தியான சுமார் ஒரு கோடியே 13 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 75,900 சிகரெட்கள் இதன் போது அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சீனப் பிரஜைகளை தடுப்புக் காவலில் வைத்துள்ள கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# இ. போ. சவுக்கு ஆறு நாட்களில் ஒரு பில்லியன் ரூபா வருமானம்

கொழும்பு, ஏப். 17

புத்தாண்டு காலத்தில் விசேட போக்குவரத்து சேவைகளை வழங்கியதன் மூலம் இலங்கை போக்குவரத்து சபை ஆறு நாட்களில் ஒரு பில்லியன் ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது என்று அந்தச் சபையின் தலைவர் சஜீவ கனகரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், புத்தாண்டுக்காக தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்லும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட போக்குவரத்து சேவைகள் மூலம் இந்த வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபை ஏப்ரல் 11ஆம் திகதி 213 மில்லியன் ரூபாய் வருவாய் ஈட்டியதாகவும், இது சபையின் வரலாற்றில் ஒரே நாளில் ஈட்டப்பட்ட மிக உயர்ந்த வருவாய் என்றும் அவர் கூறினார். (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது!

கிளிநொச்சி, ஏப். 17

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பல்நகர் பகுதியில் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை 04. 00 மணியளவில், கிளிநொச்சி பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அம்பல்நகர் பகுதியில் விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய நபர் ஒருவரை சோதனையிட்டதில் அவரிடமிருந்து 03 கிராம் 100 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (எ)

# ஆடு மேய்க்க சென்றவர் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, ஏப். 17

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலை பகுதியில் நேற்று முன்தினம் ஆடு மேய்க்கச் சென்ற முதியவர் ஒருவர், உடலில் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

முகமாலை, பொந்தர் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த குறித்த முதியவர், நேற்று முன்தினம் காலை வழமை போன்று ஆடு மேய்ப்பதற்காக சென்றார். எனினும், நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பாத நிலையில், உறவினர்கள் மற்றும் அப்பகுதியினர் அவரைத் தேடிச் சென்றனர். இதன்போது, அப்பகுதியில் உள்ள ஓரிடத்தில் அவர் உடலில் காயங்களுடன் சடலமாக கிடப்பதை கண்டனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் முகமாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த 71 வயது இளையவன் நல்லதம்பி என்று அடையாளம் காணப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பளை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து, பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கணினி நிதி மோசடிகளுக்காக இலங்கை வந்த 9 சீனர்கள் கைது

கொழும்பு, ஏப். 17

கணினி வழி நிதி மோசடிகளை முன்னெடுப்பதற்காக இலங்கைக்கு வருகை தந்த 9 சீனர்கள் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலை யத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 2 கோடியே 40 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மின்னணு தொடர்பு சாதனங்களை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

இந்த சீனப் பிரஜைகள் நேற்று அதிகாலை 12: 25 மணியளவில் சீனாவின் குன்மிங் நகரிலிருந்து “சைனா ஈஸ்டர்ன்” ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான



விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் தங்களது ஆடைகளுக்குள் மறைத்து வைத்திருந்த 383 பயன்படுத்தப்பட்ட தொலைபேசிகள், 101 ரப் கணினிகள் மற்றும் 06 வைபை ரவுட்டர்களை அதிகாரிகள் மீட்டனர்.

குறித்த சீனப் பிரஜைகளை தமது பொறுப்பில் வைத்துள்ள சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# மீண்டும் காலனித்துவ நிலைக்கு நாடு செல்லும் ஆபத்து ஏற்படும்

## வஜிர அபேவர்த்தன எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 17

வீழ்ச்சியடைந்து செல்லும் நாட்டின் பொருளாதாரத்தை அரசியல் அனுபவமுள்ள ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே கட்டியெழுப்ப முடியும். அதனால், அவரின் பிரயோசனத்தை நாட்டு மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு பெற்றுக் கொள்ளாவிட்டால் இந்த நாடு மீண்டும் காலனித்துவ நிலைக்கு செல்லும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த அரசாங்க காலங்களில் இடம்பெற்றதுபோலவே தற்போதும் நிலக்கரி மோசடி இடம்பெற்றுள்ளது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளதன் மூலம் அரசாங்கம் தவறை ஏற்றுக்கொண்டுள்ளது. கடந்த கால அரசாங்கங்கள் செய்த தவறை செய்யாமல் இருப்பதற்கே மக்கள் இந்த அரசாங்கத்தை தெரிவு செய்திருக்கிறார்கள். அதனால், அரசாங்கத்தின் தவறுகளை கடந்த காலங்களிலும் இவ்வாறான தவறுகள் இடம்பெற்றுள் ளன என்று தெரிவித்து தப்பித்துக்கொள்ள முடியாது.

அத்துடன் நாட்டை கட்டியெழுப்ப பல சட்டங்களை எமது காலத்தில் நாங்கள் ஏற்படுத்தியிருந்தோம். குறிப்பாக பொருளாதார கொள்கை சட்டம் தற்போது முற்றாக மீறப்பட்டு வருகிறது. இது பாரிய பிரச்னையாகும். அதனால், நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப பாரிய மாற்றம் தேவையாகும். 77 மாற்றத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. இதன் காரணமாக மக்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டது. அன்று ஏற்பட்ட மாற்றத்தைப்போன்ற பல மடங்கு மாற்றம் தற்போது பொருளாதாரத்துக்கு தேவையாக இருக்கிறது. அந்த மாற்றத்தை மக்களை பிழையாக வழிநடத்தும் அரசியல் கட்சிகளால் மேற்கொள்ள முடியாது.”- என்றார். (எ)

# ரயில் மற்றும் பஸ் சேவை நேற்று முதல் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 17

நேற்று முதல் நாடு முழுவதும் 50 முதல் 60 சதவீதமான தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்றைய தினத்துக்குள் தனியார் பஸ் சேவைகளை முழுமையாக வழமைக்கு கொண்டுவர முடியும் என்றும் அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன கூறினார்.

நேற்று முன்தினம் உத்தியோகபூர்வ வேலைநாளாக இருந்த போதிலும், மக்களின் வருகை குறைவாக காணப்பட்டதால், அதிகளவான பஸ்கள் பயணிகள் இன்றி இயக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முதல் ரயில் பயணங்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று சுமார் 120 ரயில் பயணங்கள் முன்னெடுக்கப்பட்டன என்றும் அந்த திணைக்களத்தின் போக்குவரத்து அத்தியட்சகர் அசங்க சமரசிங்க தெரிவித்தார்.

இதற்கமைய, நேற்று காலையும் மாலையும் அலுவலக ரயில்கள் வழமை போன்று இயங்கின. நாளை 18, நாளை மறுதினம் 19ஆம் திகதிகளில் விசேட ரயில்களை இயக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 06: 10 மணிக்கு மாத்தறை நோக்கி விசேட ரயில் ஒன்று இயக்கப்பட்டது. அத்துடன், நாளை மறுதினம் 19ஆம் திகதி பிற்பகல் மாத்தறையிலிருந்து பல விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

# மத்திய, ஊவா மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும்

கொழும்பு, ஏப். 17

மேல், சப்ரகமுவ, தெற்கு, மத்திய, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களின் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேபோல், மேல் மற்றும் தெற்கு மாகாணங்களிலும், புத்தளம் மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளிலும் காலை வேளையில் சிறிதளவு மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் சில இடங்களிலும் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும். தீவின் ஏனைய பகுதிகளில் பிரதானமாக வறண்ட வானிலையே நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய, சப்ரகமுவ, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களின் சில இடங்களிலும் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை நிலவக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். (எ)

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்!

கொழும்பு, ஏப். 17

மகாஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகமுயாய பகுதியின் பொல்கஸ்தலாவ காப்புக் காட்டில் காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

புதன்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மகாஓயா பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

உயிரிழந்தவர் உனுவதுர புபுல பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டார்.

கால்நடைகளை பார்ப்பதற்காக சென்றுவிட்டு, மீண்டும் வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே காட்டு யானை தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெண்கள் கடத்தல்: கைதானவர்கள் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில்

மட்டக்களப்பு, ஏப். 17

மட்டக்களப்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பெண்கள் கடத்தல் மற்றும் கொலை தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதே வேளை, இந்த வழக்கில் தொடர்புடைய நகைக்கடை உரிமையாளர்கள் இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் நீதிமன்றத்துக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி அ. தர்சினி முன் னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது, சந்தேக நபர்களிடமிருந்து நகைகளை கொள்வனவு செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட இரண்டு நகைக்கடை உரிமையாளர்களையும் பிணையில் விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டார். ஏனைய நான்கு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க அவர் உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 20ஆம் திகதி, கொக்கட்டிச்சோலை - நெல்லிக்காட்டு வயல் பிரதேசத்திலுள்ள பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்து வவுணதீவு, கொத்தியாபுலை பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது இளம் தாய் ஒருவர் உயிருடனும், ஏற்கனவே காணாமல் போனதாக கருதப்பட்ட மற்றொரு பெண் சடலமாகவும் மீட்கப்பட்டனர். அத்துடன், அந்த இளம் தாயின் 3 வயது சிறுமி கொத்தியாபுலை வயல் பகுதியில் உயிருடன் மீட்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் வர்ண ஜயசுந்தரவின் வழிகாட்டலில், மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லீலாரத்னவின் கண்காணிப்பில், கிழக்கு மாகாண பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தெய்வநாயகம் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த விசாரணைகளின் அடிப்படையில், வவுணதீவு காஞ்சரம்குடா பகுதியைச் சேர்ந்த 26 வயது பெண், அவரது 34 வயதுடைய கணவர், 22 வயதுடைய தம்பி மற்றும் கொள்ளையிடப்பட்ட தங்க ஆபரணங்களை வாங்கிய ஊறணி மற்றும் திருகோணமலை வீதியைச் சேர்ந்த இரு நகைக்கடை உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும், மயக்க மருந்துகளை பெற்றுக்கொடுத்த ஓட்டோ சாரதி மற்றும் மருந்துகளை விநியோகித்தவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்களில் மயக்க மருந்துகளை பெற்றுக்கொடுத்த ஓட்டோ சாரதி ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் இரண்டு நகைக்கடை உரிமையாளர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஏனைய சந்தேக நபர்கள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட் டனர். (எ)

# மீனாட்சி அம்மன் ஆலயத்தில் காட்டு யானை அட்டகாசம்

நிந்தவூர், ஏப். 17


நிந்தவூர் பிரதேசத்துக்குட்பட்ட மாட்டு பளை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய அலுவலகம் மற்றும் களஞ்சிய அறை என்பன காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

அதிகாலையில் ஆலய வளாகத்தினுள் புகுந்த யானை அங்கிருந்த களஞ்சியசாலையை தும்பிக்கையால் உடைத்துள்ளது.

அங்கிருந்த கிடாரம், சட்டி-பானை, பீங்கான்கள் எல்லாம் சேதமடைந்ததுடன் கட்டடம் பாவிக்க முடியாதளவுக்கு வெடித்துள்ளது.

மேலும் அங்கிருந்த கிணற்றையும் உடைத்துச் சேதப்படுத்தியுள்ளது. (எ-09)



## இந்தியாவில் மறைந்திருந்த

# கரந்தெனிய சுத்தாவின் சகோதரன் ராஜு கைது

கொழும்பு, ஏப். 17

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் "கரந்தெனிய சுத்தா" என அழைக்கப்படும் நபரின் சகோதரன் ராஜு இந்தியாவில் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் தகவலின்படி, குற்றச் செயல்களுடன் தொடர்புடைய விசாரணைகளின் ஒரு பகுதியாக இந்தியாவில் தங்கியிருந்த ராஜு மீது கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், அவரை அந்த நாட்டு பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்தனர்.

ராஜு மீது பல்வேறு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பான சந்தேகங்கள் நிலவுவதாகவும், அவர் நீண்டகாலமாக தேடப்பட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது. (எ)

# 6 வாகனங்கள் மோதி விபத்து: 13 பேர் காயம்

கொழும்பு, ஏப். 17

எஹெலியகொட நகரில் கட்டுப்பாட்டையிழந்த கார் ஒன்று பல வாகனங்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டது.

புதன்கிழமை இரவு 07. 00 மணியளவில் நிகழ்ந்த குறித்த விபத்தில், ஒரு மோட்டார் சைக்கிள், 3 ஓட்டோக்கள் மற்றும் 2 கார்கள் மோதிக்கொண்டன.

விபத்தில் காயமடைந்த சுமார் 13 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (எ)

# கங்கையில் நீராடியவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 17

கித்துல்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெலிகம பகுதியில் களனி கங்கையில் நீராடிக்கொண்டிருந்த நபர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

புதன்கிழமை குறித்த நபர் நீரில் மூழ்கி காணாமல் போனதாக கிடைத்த தகவலுக்கு அமைய, கித்துல்கல பொலிஸ் நிலையத்துடன் இணைக்கப்பட்ட பொலிஸ் விசேட அதிரடிப்படையின் உயிர் காப்புப் பிரிவினர் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது, ஆற்றின் ஆழமான பகுதியிலிருந்து அவரது சடலம் மீட்கப்பட்டது.

இவ்வாறு உயிரிழந்தவர் ஹற்றன், மொரஹேனகம பகுதியைச் சேர்ந்த 46 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டார்.

உயிரிழந்தவர் தனது உறவினர்கள் சிலருடன் குறித்த பகுதியில் நீராடச் சென்ற போதே இந்த அனர்த்தத்துக்கு முகங்கொடுத்தார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# காலாவதியான உணவுகளை விற்ற 400 கடைகளுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஏப். 17

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில், 400இற்கும் மேற்பட்ட வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி முதல் 12ஆம் திகதி வரை சுமார் 2,000 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது,

12 ஆயிரத்துக்கும் அதிகமான வர்த்தக நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்றும் அந்தச் சங்கத்தின் பிரதான செயலாளர் சமில் முத்துகுட தெரிவித்தார்.

சுகாதாரத்துக்குப் புறம்பான முறையில் உணவுகளை விற்பனை செய்தமை மற்றும் காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழேயே இந்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான விசேட சுற்றிவளைப்புகள் எதிர்வரும் வெசாக் மற்றும் பொசன் பண்டிகை காலங்களை முன்னிட்டும் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# சட்டவிரோத மதுபானம், கோடாவுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப். 17

மொரகஹஹேன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலன்னொருவ பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போது, சட்டவிரோத மதுபானம் மற்றும் கோடா என்பனவற்றுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

புதன்கிழமை இரவு மொரகஹஹேன பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து 101 லீற்றர் 250 மில்லி லீற்றர் (135 போத்தல்கள்) சட்டவிரோத மதுபானம் மற்றும் மதுபானம் தயாரிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த 1,110 லீற்றர் கோடா (06 பீப்பாய்கள்) என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர் பண்டாரகம, வல்கம பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (எ)

# கோர விபத்தில் சிக்கிய மாணவர்கள் படுகாயம்!

மட்டக்களப்பு, ஏப். 17

மட்டக்களப்பு - கல்முனை பழைய வீதியில், நாவற்குடா தேவாலயத்துக்கு அருகில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் இரண்டு பாடசாலை மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

நாவற்குடாவின் உட்புற வீதியொன்றில் அதிவேகமாக சென்ற மோட்டார் சைக்கிள், கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி கட்டடமொன்றின் சுவரில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்த இரு மாணவர்களும் முதலில் காத்தான்குடி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மாணவர்கள் தலைக்கவசம் அணியாமல் இருந்தமையே அவர்கள் பலத்த காயமடையக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# காரைதீவில் நாளை புத்தாண்டு கலாசார விளையாட்டு விழா

காரைதீவு, ஏப். 17

காரைதீவு விளையாட்டு கழகம் தனது 43ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் கலாசார விளையாட்டு விழாவை நாளை சனிக்கிழமை நடத்தவுள்ளது.

காலையில் மரதன் ஓட்டம் நடைபெறவுள்ளது.

மாலை கலாசார விளையாட்டு விழா காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் கழகத் தலைவர் வை. கோபிகாந் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் பல்வேறு மரபுவழி கலாசார விளையாட்டு நிகழ்ச்சிகள், சிறப்பு கலைநிகழ்ச்சிகள் மற்றும் சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதில், பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஒரு சில சர்வாதிகாரி...

தவறிவிட்டதாகத் திருத்தந்தை குற்றம் சாட்டினார்.

“அழிப்பதற்கு ஒரு நிமிடம் போதுமானது, ஆனால் சிதைந்ததை மீண்டும் கட்டியெழுப்ப ஒரு வாழ்நாள் கூடப் போதாது என்பதை யுத்தப் அறியாதது போல நடிக்கின்றனர்” என்று அவர் தனது உரையில் சுட்டிக் காட்டினார். (அ)

## முறிகண்டி பகுதியில்...

பயணித்த தம்பதியர் காயமடைந்துள்ளனர்.

விபத்து ஏற்பட்ட உடனேயே அப்பகுதி மக்கள் இணைந்து, காரில் சிக்கியிருந்த தம்பதியரை மீட்டு உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்து தொடர்பாக அப்பகுதி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## வவுனியா, யாழில்...

வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள விசேட அறிவுறுத்தலின்படி,

வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மேல், சப்ரகமுவ, தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுடன் மொனராகலை மாவட்டத்திலும் இந்த வெப்பமான காலநிலை நிலவக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## இலங்கைத் தமிழ்...

வலியுறுத்தப்பட்டுள்ளது.

விஜய் தலைமையில் தமிழக சட்டமன்ற தேர்தலில் களமிறங்கியுள்ள தமிழக வெற்றிக் கழகம், ஏனைய கட்சிகளுக்கு பாரிய சவாலாக அமையும் என்ற கருத்துக் கணிப்புகளுக்கு மத்தியில், அந்தக் கட்சி நேற்று தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதில் இலங்கை தமிழர்களின் நலன் மற்றும் கச்சதீவு விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, தமிழகத்தில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை பெற்றுக் கொடுப்பதன் ஊடாக, மாநில அரசின் அனைத்து நலத் திட்டங்களையும் இலங்கைத் தமிழர்கள் பெறுவதை உறுதி செய்ய முடியும் என தமிழக வெற்றிக் கழகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் வாழும் தமிழர்களின் உரிமைகளை, பண்பாட்டு அடையாளங்களை, உடமைகளை காப்பதற்கு ஒன்றிய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான அழுத்தங்களை தமது கட்சி வழங்கும் என தமிழக வெற்றிக் கழகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இன ரீதியாக நிலவும் பாகுபாடுகளை களைய, ஒன்றிய அரசு ஊடாக தமிழக வெற்றிக் கழகம் உரிய முயற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் எனவும் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்திய - இலங்கை அரசுகளுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட கச்சத்தீவு ஒப்பந்தத்திற்கு அமைய, மன்னார் வளைகுடாவில் தமிழக கடற்றொழிலாளர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை மீட்க அழுத்தம் கொடுக்கப்படும் என தமிழக வெற்றிக் கழகம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, தமிழக கடற்றொழிலாளர்களின் உரிமையை தக்கவைப்பதற்கு, தேவையான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு மேற்கொள்வதற்காக, உண்மையாகவும், உணர்வுபூர்வமாகவும் தமிழக வெற்றிக் கழகம் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என அதன் தேர்தல் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## மகிந்த மீதான...

செய்திகள் பரப்பப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டியுள்ள அவர்கள், இதன் மூலம் முன்னாள் ஜனாதிபதியின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்க முயற்சிப்பதாகத் தெரிவித்தனர்.

இந்த முறைப்பாட்டை முன்வைப்பதற்காக பொதுஜன பெரமுனவின் செயற்குழு உறுப்பினர் பசன் கஸ்தூரி, கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பிந்து எனப்படும் தயாகாந்த பெரேரா மற்றும் கட்சி உறுப்பினர் எம். நிஷாந்த ஆகியோர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு சென்றனர்.

உண்மைக்குப் புறம்பான இவ்வாறான அநாவசிய மான பரப்புரைகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என இதன்போது அவர்கள் வலியுறுத்தினர். (அ)

# ஈரானுக்கு இராணுவ உதவி திட்டவட்டமாக மறுத்த சீனா

பீஜிங், ஏப். 17

ஈரானுக்கு சீனா இராணுவ உதவி வழங்கி வருவதாக ஊடகங்களில் தகவல் வெளியான நிலையில், அதை சீனா திட்டவட்டமாக மறுத்துள்ளது.

கடந்த மார்ச் 28 ஆம் திகதி, ஈரான் மீது இஸ்ரேல் - அமெரிக்கா இணைந்து தாக்குதலை தொடங்கின. ஒரு மாத காலத்துக்கு பின்னர் 2 வார தற்காலிக போர் நிறுத்தம் அமுலில் இருக்கிறது.

இந்தச் சூழலில், ஈரானுக்கு சீனா இராணுவ உதவி செய்வதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகின. அந்தத் தகவலை திட்டவட்டமாக மறுத்துள்ளது சீனா. கூடவே, அதன் அடிப்படையில் அமெரிக்கா வரி விதிப்பில் ஈடுபடுமானால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில், சீன வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் லின் ஜியான் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில்,

ஈரானுக்கு சீனா இராணுவ ரீதியிலான உதவிகளை செய்வதாக பல்வேறு ஊடகங்களிலும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்தத் தகவல்கள் அனைத்தும் சித்திரிக்கப் பட்டவை. இதன் அடிப்படையில், சீனா மீதான வரிகளை அமெரிக்கா அதிகப்படுத்தினால், சீனா தக்க பதிலடியை தரும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# மன்னார் பஸ் நிலையத்தில் சக பஸ் சாரதியுடன் முரண்பட்ட நடத்துநருக்கு காலவரையற்ற தடை!

யாழ்ப்பாணம், ஏப். 17

மன்னார் பஸ் நிலையத்தில் சக தனியார் பஸ் சாரதியுடன் பாரதூரமான முறையில் முரண்பட்ட தனியார் பஸ் நடத்துநருக்கு வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் காலவரையற்ற பணி தடை விதிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சு.விமலேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த 08.04.2026 அன்று பேசாலை மார்க்கத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த மற்றொரு தனியார் பஸ்ஸின் சாரதியுடன் குறித்த தனியார் பஸ் நடத்துநர் முரண்படும் காணொளி சமூக வலைத்தளங்களில் பரவலாக பகிரப்பட்டிருந்தது.

இதனை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையால் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளில் குறித்த நடத்துநரின் ஒழுங்கீனமான செயல்பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், சர்ச்சைக்குரிய நடத்துநருக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் காலவரையற்ற பணித் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில், அவர் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினூடாக வழி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு பஸ்ஸிலும் பணியாற்றுவதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஆட்பதிவு...

முன்னெடுக்கப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தமக்கான சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக, இன்று தமது அலுவலகங்களுக்கு வருகை தர வேண்டாம் என ஆட்பதிவுத் திணைக்களம் அறிக்கை ஒன்றினூடாக பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கணினி கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருவதாகவும், விரைவில் அதனை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மசகு எண்ணெய்...

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதத்திற்குப் பிறகு, நாட்டுக்கு வரும் முதலாவது மசகு எண்ணெய் கப்பல் இதுவாகும்.

தற்போதைய எரிபொருள் கையிருப்பை உறுதிப்படுத்தும் வகையில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மற்றுமொரு எரிபொருள் தாங்கிக் கப்பல், இந்த மாத இறுதிக்குள் நாட்டை வந்தடையவுள்ளதுடன், அடுத்த மாத இறுதியில், அமெரிக்காவில் இருந்து மசகு எண்ணெய் ஏற்றிய கப்பலொன்று வருகை தரவுள்ளது.

அமெரிக்காவில், மசகு எண்ணெய் ஏற்றும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

அங்கிருந்து இலங்கைக்கான பயணத்தை நிறைவு செய்ய, சுமார் 45 நாள்கள் தேவை என பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே குறிப்பிட்டுள்ளார். (அ)

## ஆற்றில்...

செல்லப்பட்டனர்.

அவர்களில் தந்தை , மகன் உள்ளிட்ட மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, நீரில் அடித்து செல்லப்பட்டவர்களில் இருவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

ஏனையோர் காணாமல்போன நிலையில் அவர்களை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மகாவலி கங்கையில் புத்தாண்டு தினத்தில் நீராடிய ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று சகோதரர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் நேற்று தந்தை, மகன் உள்ளிட்ட மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளமை பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ)

## நெடுந்தீவு கலப்பு...

தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நெடுந்தீவு பிரதேச மருத்துவமனைக்குச் சென்ற ஆளுநர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர், அங்கு நிலவும் பல்வேறு குறைபாடுகள் மற்றும் தேவைகள் குறித்துக் கேட்டறிந்தனர். குறிப்பாக, மருத்துவர்களின் தேவை உள்ளிட்ட ஆளணிப் பற்றாக்குறை மற்றும் மருத்துவமனை எதிர்நோக்கும் ஏனைய சவால்கள் தொடர்பில் இதன்போது ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

இவற்றைக் கேட்டறிந்த கௌரவ ஆளுநர், மருத்துவமனையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படும் என உறுதியளித்தார். (அ)

## வவுனியாவில்...

உள்ளமை தொடர்பாக நேற்று மதியம் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது. எனினும் நீண்ட நேரத்தின் பின்னரே பொலிஸார் அந்தப் பகுதிக்கு வருகை தந்தனர் எனக் கூறப்படுகின்றது.

அங்கு நீண்ட காலமாக யாசகம் பெற்று வந்த முதியவர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மாநகரசபை உறுப்பினர் பர்ஸ்சான் பொலிஸாருடன் இணைந்து சடலத்தை அங்கிருந்து அகற்றி வவுனியா வைத்திய சாலைக்கு கொண்டு சென்றார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## கட்டைக்காடு...

நிலை தோன்றியுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபரை உடனடியாக கைது செய்யுமாறு மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினர் முறைப்பாடு அளித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# சலுகைகளைத் தவறாக பயன்படுத்தவேண்டாம்

## அமெரிக்க தூதரகம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 17

அமெரிக்காவிற்குப் பயணம் செய்யத் திட்டமிட்டுள்ள வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

வரி செலுத்துவோரின் நிதியுதவியுடன் வழங்கப்படும் பொது நலன்புரித் திட்டங்களை தவறாகப் பயன்படுத்துவது, கடுமையான சட்ட மற்றும் குடியேற்ற விளைவுகளை ஏற்படுத்தும் என்று அந்த அறிவிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய சலுகைகளை முறையற்ற முறையில் பெறுவது அல்லது தவறாகப் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட நபர்களின் விஸாக்கள் உடனடியாக இரத்துச் செய்யப்படும்.

மேலும், இத்தகைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் அமெரிக்க விசாக்களைப் பெறுவதற்கு நிரந்தரத் தகுதியீனத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# பிள்ளையான் திடீர் சுகயீனம் வைத்தியசாலையில் அனுமதி!

கொழும்பு, ஏப். 17

பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பில் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் இதனை உறுதிப்படுத்தினார். சுகயீனம் காரணமாக நேற்று முன் தினம் பிற்பகல் அவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், அவர் தற்போது மருத்துவர்களின் கண்காணிப்பில் இருப்பதாகவும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (அ)

# மக்கள் நலன்சார் திட்டங்களை முன்னெடுக்க செயற்படுவோம்!

## ஜனாதிபதியின் செயலாளர் அழைப்பு

கொழும்பு, ஏப். 17

புதிய கருத்துக்கள் மற்றும் திட்டங்களுடன் ஜனாதிபதியின் மக்கள் நலன் சார்ந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக்க சனத் குமாநாயக்க ஜனாதிபதி அலுவலக பணியாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் பின்னர், ஜனாதிபதி அலுவலக பணியாளர்கள் புத்தாண்டுக்கான தமது கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது ஜனாதிபதியின் செயலாளர், பணியாளர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

கடந்த ஆண்டின் தவறுகள் மற்றும் குறைபாடுகளைத் தவிர்த்து, புதிதாக சிந்தித்து புதிய மனப்பாங்குகளுடன் முன்னேறிச் செல்வதற்குப் புத்தாண்டுப் பிறப்பு ஒரு சிறந்த வாய்ப்பாகும் எனவும் குறிப்பிட்டார்.

அதன்படி, நாட்டின் பிரதான அரச நிறுவனம் என்ற வகையில் ஜனாதிபதி அலுவலகம் கடந்த ஆண்டில் ஆற்றிய பணிகளை மீளாய்வு செய்து, அந்த அனுபவங்களுடன் புத்தாண்டில் திட்டங்களை வகுப்பதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதியின் செயலாளர், இதுவரை ஆற்றிய பணிகளுக்காக பணியாளர்கள் அனைவருக்கும் தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி பிரபாத் சந்திரகீர்த்தி, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர்களான கபில ஜனக பண்டார, ரோஷன் கமகே உள்ளிட்ட ஜனாதிபதி அலுவலகத்தின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# இலங்கையில் எரிபொருள், மின்சார விநியோகத்தில் பாதிப்பு ஏற்படாது!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அறிவிப்பு



கொழும்பு, ஏப். 17

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலுக்கு மத்தியிலும், இலங்கையின் எரிபொருள் மற்றும் மின்சார விநியோகம் தடையின்றி முன்னெடுக்கப்படும் என சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், உலக சந்தையில் ஏற்பட்டுள்ள விலை ஏற்ற இறக்கங்கள் காரணமாக உள்நாட்டில் எரிபொருள் விலையில் சிறிய அதிகரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாகக் குறிப்பிட்டார்.

எனினும், இந்த விலை அதிகரிப்பின் சுமையை முழுமையாக மக்கள் மீது சுமத்தப்போவதில்லை என அவர் உறுதியளித்தார். இதற்கான மேலதிக செலவின் கணிசமான பகுதியை அரசாங்க திறைசேரி ஏற்கும் என அவர் சுட்டிக் காட்டினார்.

போர்ச் சூழல் வழமைக்குத் திரும்பியதும், தற்போதுள்ள அதிகப்படியான எரிபொருள் விலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நிலைமைகள் சீரடைந்தவுடன் அதன் நன்மைகளை உடனடியாக நுகர்வோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# முன்னாள் எம்.பி. ஒருவர் ஆயுதங்களுடன் கைது!

கொழும்பு, ஏப். 17

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்தன கத்ரி ஆராச்சி ஆயுதங்களுடன், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரி-56 ரக இரண்டு மகசின்கள், அதற்கான 221 தோட்டாக்கள் மற்றும் கைகுண்டு ஒன்றும் அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கெஸ்பேவ நீதவான் நீதிமன்றினால் பெறப்பட்ட சோதனையிடல் பிடியாணையின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே, குறித்த ஆயுதங்களுடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

# இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் அலுவலகம் சி.ஐ.டி. கட்டுப்பாட்டில்

கொழும்பு, ஏப். 17

இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் கொஹுவலவிலுள்ள தலைமை அலுவலகம், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் தொடர்ச்சியான கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 11 ஆம் திகதி முதல் சீல் வைக்கப்பட்டுள்ள இந்த அலுவலகத்தில், அத்தியாவசிய நாளாந்தப் பணிகளை முன்னெடுப்பதற்கு மாத்திரம் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அனைத்துப் பணிகளும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளின் நேரடி மேற்பார்வையின் கீழேயே இடம்பெறவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட நிலக்கரி இறக்குமதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் குறித்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமணாயக்க விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தலைமை அலுவலகத்தைப் பாதுகாப்பதற்காக நான்கு பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இரண்டு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அடங்கிய விசேட பாதுகாப்புக்குழு 24 மணிநேரமும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நெடுந்தீவு மக்களின் தேவைகளை நிறைவேற்ற முழுமையான வாய்ப்பு

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 17

நெடுந்தீவுப் பிரதேச மக்களின் வலிகள் எனக்கு நன்றாகத் தெரியும். உங்களின் ஆதங்கங்களை நான் ஒருபோதும் மறுக்கவில்லை. தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில், உங்கள் பிரதேசத்தின் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்கான முழுமையான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. ஒரே நாளில் அனைத்தையும் செய்து முடிப்பதற்கு எங்களுக்கும் விருப்பம் இருந்தாலும், நடைமுறையில் அதனைப் படிப்படியாகவே முன்னெடுக்க முடியும், என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் 38 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில், நெடுந்தீவு இறங்குதுறையில் புதிதாக அமைக்கப்பட்ட சுற்றுலா தகவல் நிலையம் மற்றும் பயணிகள் இளைப்பாறும் மண்டபம் (குளியலறை, மலசலகூட வசதிகளுடன்) திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் நா.



வேதநாயகன் மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு கட்டடத் தொகுதியை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் மக்கள் மத்தியில் உரையாற்றிய ஆளுநர் மேலும் தெரிவிக்கையில் - நான் 1991ஆம் ஆண்டு எனது முதல் நியமனமாக இந்தப் பிரதேசத்துக்கே உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டேன். அப்போதிலிருந்தே இந்த மக்கள் கடல் போக்குவரத்துச் சிக்கல்களை எதிர்கொண்டு வருவதை நான் அறிவேன். அன்றைய கால கட்டத்தில், "குமுதினி" படகுதான் இந்தக் கடற்போக்குவரத்துக்குப் பொருத்தமானது என மக்கள் கூறினார்கள். அதேபோல, நெடுந்தீவு இறங்குதுறையைப் புனரமைக்க வேண்டும் எனவும் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வந்தார்கள். நான் யாழ். மாவட்ட செயலாளராகப் பதவியேற்ற பின்னரும் இந்த இறங்கு துறையைப் புனரமைக்கப் பல முயற்சிகளை மேற்கொண்டேன் ஆயினும் அது முழுமையாகச் சாத்தியப்படவில்லை.

தற்போதைய அரசாங்கம் அந்த வேலைத்திட்டங்களுக்கான காத்திரமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது-என்றார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், நெடுந்தீவு பிரதேச செயலாளர், வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சுற்றுலாப் பணியகத்தின் பணிப்பாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] மறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media